# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)முன்னோடிப் பரீட்சை - 2017

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் I, II | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ............................................................................ | | 22 T I, II |

**கவனிக்க:**

i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை ( × ) இடுக.

iv) அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

## பகுதி - I

* **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "நெடுநீர்க் **குட்டத்துத்** துடமெனப் பாய்ந்து." இங்கு **குட்டம்** என்பது
    1) வரை 2) மடு 3) ஆழி 4) தண்டலை

02. "தேனருவித் **திரையெழுப்பி** வானின் வழியொழுகும்." இங்கு **திரை** என்பது
    1) சமுத்திரம் 2) மஞ்சு 3) பங்கயம் 4) தரங்கம்

03. "எட்டுணையானும் இரவாது தான் ஈதல்" என்பதில் **ஈதல்** என்பதன் எதிர்க் கருத்து
    1) கொடுத்தல் 2) புரத்தல் 3) ஏற்றல் 4) நல்குதல்

04. "**அன்பு** சிறிதளவும் இல்லாத தம்பதியரைச் சித்திரிக்கின்றார்" என்பதில் **அன்பு** என்பதன் எதிர்க் கருத்து
    1) வன்பு 2) இரக்கம் 3) கருணை 4) தயக்கம்

05. "ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர்" என்பதில் **ஐவரில்** அடங்காதவர்
    1) இராமன் 2) குகன் 3) நகுலன் 4) சத்துருக்கன்

* **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. 'இன்டர்பேஸ் என்பன போன்ற வார்த்தைகள் எனக்குச் சிதம்பர சக்கரமாக இருந்தன" – இன்டர்பேஸ் என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
    1) சுட்டித்திண்டு 2) இடைத்தொடர்பு
    3) வன்தட்டு 4) அடைவு

07. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
    1) கடல் – நீர் 2) மரம் – இலை
    3) சொற்றொடர் – சொற்கள் 4) ஆகாயம் – சூரியன்

08. சினிமாத் துறையில் டிசோல்வ் (DISSOLVE) என்பது
    1) மயங்கித் தெளிதல் 2) இருண்டு தெளிதல்
    3) படத்தொகுப்பு 4) ஒலியமைப்பு

09. தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆகித் தமிழில் வழங்கும் சொல் எது?
1) காரணம் 2) அரன் 3) விட்டுணு 4) இலக்குமி

10. பெண்யானை பிடியெனப்படுவது போல, பெண் நரியைக் குறிக்கும் சொல்
1) பிணா 2) மந்தி 3) பாட்டி 4) வடவை

11. சீவனத்தைக் கெடுத்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
1) காது குத்துதல் 2) கழுத்தறுத்தல்
3) கண் கலத்தல் 4) வயிற்றிலடித்தல்

12. 'கண்ணனின் உழைப்பின் பயனாக அவனது குடும்பம் தலையெடுத்தது." இங்கு தலை யெடுத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
1) பெருநட்டமடைதல் 2) முன்னேறுதல்
3) வறுமையடைதல் 4) கவலையுறுதல்

13. வாயில் என்பது
1) குழூஉக்குறி 2) இலக்கணமுடையது
3) மரூஉ 4) இலக்கணப்போலி

14. கட்டுக்கடங்கா இளைஞன்
1) ஊதாரி 2) வீரன் 3) சிறுபட்டி 4) பேதை

15. விடயப் புலமையின்றி வேறொன்றைக் குறை கூறுதல் என்பதை வலியுறுத்தும் பழமொழி
1) ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்.
2) அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
4) காமாளைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.

16. ஏழ்மையிலும் சிறப்பு வேண்டும் என்பதை வலியுறுத்தும் பழமொழி
1) இட்டுக்கெட்டார் எங்குமில்லை. 2) இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
3) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர். 4) இக்கரைக்கு அக்கரை பச்சை.

17. உருவும் நிழலும் போல என்ற உவமைத் தொடருக்கு நிகரான பிறதொரு உவமைத் தொடர்
1) எள்ளும் எண்ணெயும் போல 2) ஓடும் புளியம்பழமும் போல
3) தாமரையிலைத் தண்ணீர் போல 4) கரடி பிறை கண்டது போல

18. "வழிமேல் விழிவைத்து" என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
1) நன்றியுணர்வு 2) எதிர்பார்த்துக் காத்திருத்தல்.
3) இரண்டறக் கலத்தல். 4) கொடுத்து மகிழ்தல்.

19. "பறகுபறகென்றெ சொறியப் பதமாயிருந்த பாக்குவெட்டி. " இதில் 'பறகுபறகு' என்பது
1) அடுக்கிடுக்குத் தொடர் 2) இணைமொழித்தொடர்
3) அடுக்கிடுக்குத் தொடர் 4) இரட்டைக்கிளவி

20. "நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்." இங்கு அவுக்கென எனும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்
1) அச்சம் 2) கோபம் 3) விரைவு 4) துன்பம்

* **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. தமிழிலுள்ள நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை
1) 90 2) 7 3) 133 4) 126

22. மூன்று மெய்கள் மயங்கி இடம்பெற்ற சொல்
1) வாழ்க்கை 2) பட்டம் 3) கைம்மருந்து 4) தம்பி

23. "சிறுவர்களிடையே ஒற்றுமை ஓங்கட்டும்." இதில் வரும் ஓங்கட்டும் என்பது
1) குறிப்பு வினை
2) ஏவல் வினை
3) எதிர்மறை வினை
4) வியங்கோள் வினை

24. அகர வரிசையில் அமையாத சொற்றொகுதி
1) கரம், கூடம், கொக்கு, கேர்லம்
2) சரம், சூடம், சொண்டு, சாடி
3) ஆடு, பாதம், முறம், வரகு
4) இரை, காடு, ஞாலம், நண்டு

25. ககர(க்)மெய் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1) கண்டம்
2) காடு
3) பாகல்
4) பக்கம்

26. இம்முறை கடும் வரட்சி நிலவியது.
காய்கறிகளின் விலை வீழ்ச்சி அடையவில்லை. இவ் வாக்கியத்தை இணைக்கப் பொருத்த மான இணைப்பினைச் சொல்
1) ஆகவே
2) எனவே
3) அத்துடன்
3) ஆயினும்

27. பெற்றிலன் என்பதில் இடம்பெற்றுள்ள எதிர்மறை இடைநிலை
1) இல்
2) அல்
3) ற்
4) இலன்

28. பின்வருவனவற்றுள் இலக்கணப் போலியாக அமைவது
1) மையல்
2) சுகயீனம்
3) நகர்ப்புறம்
4) முன்றில்

* **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1) ஆக்கப் பெயர் : தொழிலாளி, முயற்சி, பொருளியல்
2) மாற்றுப் பெயர் : தான், அவன், நீ
3) ஆகு பெயர் : கார்விளைந்தது, வெள்ளை அடித்தான், மழை பொழிந்தது.
4) கூட்டுப் பெயர் : விண்மீன், தொலைபேசி, கண்ணாடி

30. 1) இயல்புப் புணர்ச்சி : பொன்மணி, கடலலை, ஆணழகன்
2) தோன்றல் விகாரப் புணர்ச்சி : பற்பொடி, கல்விக்கடல், பெண்ணடிமை
3) திரிதல் விகாரப் புணர்ச்சி : மட்குடம், கற்சிலை, முட்செடி
4) கெடுதல் விகாரப் புணர்ச்சி : வட்டநிலா, ஞானமகன், சட்டநூல்

* **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு .................................... வழங்கப்பட்டது.
1) சன்மானம்
2) நஷ்டஈடு
3) வெகுமதி
4) மானியம்

32. கடல்வள எல்லை தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே .......................... கைச்சாத்திடப்பட்டது.
1) உறுதி
2) உத்தரவு
3) ஒத்துழைப்பு
4) உடன்படிக்கை

33. போதைப் பொருட் பாவனையின் விளைவுகள் பற்றி மாணவர்களுக்கு ................................ வழங்கப்பட்டது.
1) பாதுகாப்பு
2) தண்டனை
3) விழிப்புணர்வு
4) கண்காணிப்பு

34. பெட்டியில் இருந்த ஒவ்வொரு மாம்பழமும் .......................................
1) அழுகியிருந்தது
2) அழுகியிருந்தன
3) அழுகியிருக்கின்றன
4) அழுகின

35. தமிழ்பாட அடைவுமட்டம் தொடர்பாக ஆராய்வதற்கென கல்வி அமைச்சினால் நியமிக் கப்பட்ட ஆணைக்குழு செய்த ............................................ பரிசீலிக்கப்பட்டது.
1) ஆய்வுரை
2) பரிந்துரை
3) மதிப்புரை
4) கருத்துரை

36. நேற்று இடம்பெற்ற கண்டனப் பேரணிக்கு மக்கள் கூட்டம் .........................................

1) அலை மோதின
2) அலை மோதினர்
3) அலை மோதியது
4) அலை மோதினார்கள்

* **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**காலைப் பொழுதில் விழித்துமே – தன்**
**கடமைகள் யாவும் முடித்துமே**
**மேலைப் பரம் பொருள் சேவடி – மிக்க**
**வேட்கையோடும் பணிந்தேத்துவான்**
**கையினில் மண்வெட்டி கொண்டுமே – உயிர்க்**
**காதலியானவள் பின்வர**
**வெய்யில் எழுந்திடு முன்பு அவன் – தன்**
**விளை நிலம் நாடிப்புகுவனே.**

**ஏழை எளியவர் வாழவே – அன்பு**
**என்றுந் சொரிந்திடும் ஈகையான்**
**கூழெனினும் பிறர்க்கீந்தலால் – தான்**
**குடித்தறியாக் குணக் குன்றன்**

37. இப்பாடலில் கவிஞர் கூறவந்த பிரதான கருத்து

1) விவசாயியின் வாழ்வு
2) காலைக்காட்சி
3) ஏழை எளியவர் வாழ்வு
4) கடமைகள்

38. இறுதிப்பாடலில் வெளிப்படுத்தப்படும் நற்பண்பு

1) காலையில் எழுதல்.
2) கடமைகள் முடித்தல்.
3) பிறர்க்கீதல்
4) பரம்பொருளை வணங்குதல்.

39. "உயிர்க்காதலி" என்பதில் இடம்பெற்றுள்ள அணி

1) உருவகம்
2) உயர்வுநவிற்சி
3) தற்குறிப்பேற்றம்
4) உவமை

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) அவனுக்கு பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கிறது.
ஆ) பஞ்ச பூதங்களும் அவன் வசப்பட்டு அவனுக்கு ஊழியஞ் செய்து கொண்டு நிற்கின்றன.
இ) உயிரினங்களுள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்கு கின்றான்.
ஈ) மனிதன் தன் பகுத்தறிவைத் துணையாக கொண்டு அரிய பல காரியங்களை நிறை வேற்றி வருகின்றான்.
உ) மிகச் சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்றுவிட்டது.

1) உ, ஆ, இ, அ, ஈ
2) ஆ, இ, அ, உ, ஈ
3) ஈ, ஆ, இ, அ, உ
4) இ, அ, ஈ, ஆ, உ

(40 × 1 = 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   "பொருதெனினும் பெறுவனிது வசையுமன்றே."

2. பாடு என்னும் சொல் பெயராகவும், வினையாகவும் அமையக்கூடிய வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைக்குக.

3. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு கொண்டு அமைக்குக.

4. பின்வரும் வாக்கியத்திலுள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக. அதிமேதகு இலங்கையின் ஜனாதிபதி முன்னாள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

5. "நான் கவிதை எழுதினேன்"
   இதனைச் செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.

6. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.
   "அம்மாவின் மூக்குத்திக் கல்லு மாதிரி வியர்வைத் துளிகள் நெற்றியில் கன்னத்தில் கழுத்தில் மின்னுகிறது.

7. யூதாஸ் இயேசுவின் கூடவே இருந்தான்.
   யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான்.
   யூதாஸ் வெள்ளிக்காசுகளைப் பெற்றுக் கொண்டான்.
   மேலே உள்ள வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.

8. அழைப்பிதழில் இடம்பெறாத அம்சம் இரண்டு எழுதுக.
   தலைப்பு, தொடருரை, விளிப்பு, அழைப்பவர், உள்முகவரி

9. 'அம்மா முகம் மலர்ந்து அடுக்களைக்குள் நுழைகின்றா' இவ்வாக்கியத்தில்
   அ - அடுக்களை எனற சொல்லின் பொருள் யாது?
   ஆ - அடுக்களை எப்பிரதேச கிளை மொழிச் சொல் ஆகும்.

10. கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் கடலிலுண்டு ...................." இப்பாடலில்
    அ - இடம்பெற்றுள்ள அணி யாது?
    ஆ - இவ் அணியை விளக்குக.

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

I. மனித குலத்தின் இயல்பு வாழ்வுக்கு இன்று பெரும் அச்சுறுத்தலாகக் காலநிலை மாற்றமும் இயற்கை அனர்த்தங்களும் காணப்படுகின்றன. மனித நடவடிக்கைகளே இவற்றிற்குப் பெரிதும் காரணங்களாக அமைகின்றன. அதனை உணர்ந்து மனிதன் இயற்கையைக் கண்ணும் கருத்துமாகப் பேண வேண்டும் என வலியுறுத்தும் வகையில் ஒரு விளக்கக் கட்டுரை.

II. இன்று மாணவர்கள் எதிர்நோக்கி வரும் சவாலாக முகநூல் பாவனை அமைந்துள்ளது. முகநூல் பாவனையினால் கிடைக்கும் நன்மைகளைக் கூறி அதன் வழி ஒழுகும் மாணவன் ஒருவருக்கும், முகநூல் மாணவருக்குப் பிரச்சினைக்குரியது எனக் கூறி மறுக்கும் மற்றொருவருக்கும் இடையில் இடம் பெறும் உரையாடல்.

The National e-learning Portal for the General Education

III. இன்று நாட்டில் விளையாட்டுத்துறையில் பெருமளவு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் எமது நாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் சாதனை புரிந்து வருகின்றனர். எமது நாட்டுக்கு பேரும் புகழும் ஈட்டித் தந்துள்ளனர். இத்தகைய விளையாட்டுக்களில் போதிய பயிற்சியும், ஆர்வமும் பள்ளிப் பருவத்திலே மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நீர் மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு.

IV. சிறு வயதிலே பெற்றோரை இழந்து விட்டான் விமலன். அவனது சகோதரி விமலா. விமலன் தான் விமலாவிற்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து அவளை வளர்த்து வந்தான். அவன் நன்றாகப் படித்து வைத்தியராகி இன்னலுறும் மக்களுக்கு சிறப்பாகத் தொண்டாற்ற வேண்டும் என்பதே அவனின் விருப்பம். ஆனால் அவனது இலட்சியத்திற்கு பல தடைகள் ஏற்பட்டன. விமலனின் இலட்சியம் நிறைவேறியதா-----------? இக் கருவைக் கொண்டு ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

**(03) தரப்பட்டுள்ள உரைப்பகுதியை 40 - 45 சொற்களில் சுருக்கி எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

அறிஞர்கள் அந்தக் காலம் இந்தக் காலம் வரையில் ஒரே நெறியில் வாழ்க்கையைக் கோலி வருகிறார்கள். அன்று வற்புறுத்திய உண்மைகளை இன்றும் வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால், அன்று சிலர் மட்டும் திருந்தி நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இருந்தால் போதும். மற்றவர்கள் அவர்களைப் பார்த்துக் கண்மூடி நடந்தால் போதும் என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கை தோற்றுவிட்டது. பல தேர்வுகளில் அது தவறி விட்டது. பல முறையும் தோற்றுவிட்டது. அதனால் தான் இப்போது அறிஞர்கள் குடியரசு முறையை வற்புறுத்துகிறார்கள். எல்லோரும் உரிமை பெற்றால் தான் எவரும் ஏமாறாமல் வாழ வழி உண்டு என்று எடுத்துரைக்கிறார்கள். எல்லோரும் வல்லவர்களாக ஆனால் தான், எவரும் ஏங்காமல் வாழ முடியும் என்று விளக்குகிறார்கள். எல்லோரும் வல்லமை பெற்றால்தான், எல்லோரும் நல்லவர்களாக வாழக்கூடும் என்று தெளிவாகச் சொல்கிறார்கள். அப்போதுதான் உலகம் நல்லது, காலமும் நல்லது என்று காண முடியும் என்பது அவர்கள் பெற்றுள்ள புதிய நம்பிக்கை.

இந்த முயற்சியில் சட்டங்கள் தோற்ற பிறகும், பொது மக்கள் சோர்ந்த பிறகும், அறிஞர்கள் சிலர் பின்வாங்கவில்லை, அவர்களிடம் தளராத உறுதி இருந்து வருகின்றது. அதுதான் அவர்களுடைய மனச்சான்றின் உறுதி சட்டங்கள் பணத்துக்குப் பணிந்து விட்டன. பொது மக்கள் பணத்துக்குப் பணிந்து விட்டார்கள். ஆனால் இந்த அறிஞர் பணியவில்லை. பணம் பெரியது அல்ல. குணமே பெரியது என்று தொன்று தொட்டுச் சொல்லி வருகிறார்கள். அறத்தை வணங்கு அதிகாரத்தை வணங்காதே என்று அன்று முதல் வலியுறுத்தி வருகிறார்கள்.

(10 புள்ளிகள்)

**(04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கவிஞர்களுக்கு மேலே கவிச்சக்கரவர்த்திகள்; அவர்களுக்கு மேலே சான்றோர்களான புலவர்கள் இருக்கிறார்கள். இவர்களைப் பிளேற்றோ நிந்திக்கவுமில்லை; நாடு கடத்தவுமில்லை. பிளேற்றோ சீறிப் பாய்கிற கவிஞர்கள் மேலே காட்டப்பட்ட மூத்திறத்தவர்களும் அல்லாதவர்கள். அவர்கள் கவிதை வெறியர்கள். பாடாமலிருக்க மாட்டாதவர்கள். பாடுகின்ற பைத்தியம் உள்ளவர்கள். பாவம் ! அவர்கள் நன்றாகப் பாடலாம். அவர்களை யாரும் தடை செய்ய மாட்டார்கள். ஆனால் கவிதை வெறியர்கள் அவ்வளவில் அடங்குவார்களா? கடவுள், வண்ணத்துப்பூச்சி, காதல், சமயம், தத்துவம், அரசியல் முதலிய எல்லாவற்றையும் அவர்கள் பாடி விடுவார்கள். பாமரசனங்கள் கூடுமிடம் அவர்களது கவியரங்கமாய் இருக்கும் சனநாயக அரசியலின் வேரை அசைத்து விடுவார்கள் அவர்கள். அதுதான் பிளேற்றோவுக்குக் கோபம். ஒரு பொறுப்புள்ள சிறிய உத்தியோகத்தைக் கூட ஒரு

The National e-Learning Portal for the General Education

*நிமிட நேரம் வகிக்க முடியாத கவிதை வெறியர்கள் அரசாங்கத்துக்குப் புத்தி பாடுகிறார்களே. அவர்களை நாடு கடத்தாமல் வேறென்ன செய்வது என்கிறார் பிளேற்றோ.*

1. *இங்கு முத்திறத்தவர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?*
2. *கவிதை வெறியர்களின் பண்புகள் எவை?*
3. *கவிதை வெறியர்களின் கவியரங்கமாய் அமைவது எது?*
4. *கவிதை வெறியர்களை நாடு கடத்த வேண்டும் என்பதற்குப் பிளேற்றோ முன்வைக்கும் காரணங்கள் எவை?*
5. *'சனநாயக அரசியலின் வேரை அசைத்து விடுவார்கள்' இங்கு இடம்பெற்ற அணியை விளக்குக.*

(2 × 5 = 10 புள்ளிகள்)

**(05)** *இன்று இளைஞர் மத்தியில் அதிகரித்து வரும் போதைப் பொருட்களின் பாவனையினால் எமது நாடு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. எனவே போதைப்பொருளின் பாதக நிலமையை நெறிப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு பத்திரிகை நிறுவனம் ஒன்றிற்கு 100 சொற்களுக்குக் குறையாது கடிதம்.*

**அல்லது**

*உமது பாடசாலைச் சூழலில் நடைபெற்ற டெங்கொழிப்பு தொடர்பான சிரமதானம் பற்றி சுகாதாரக் கழகத்தின் செயலாளர் என்ற வகையில் 100 சொற்களுக்கு குறையாத அறிக்கை எழுதுக.*

*(15 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)முன்னோடிப் பரீட்சை – 2017**

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் III | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ...................................................................................... | | 22 T III |

## பகுதி - III

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1. குரு நாட்டில் கலந்து வாழ உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள்.
   அ) இக் கூற்றைக் கூறியவர் யார்?
   ஆ) குரு நாடு எனக் குறிப்பிடப்படும் நாடு எது?

2. "பிறந்தானு முளனென்னப் பிரியாதான் தனைப் பயந்த பெரியாள்" என்றான்
   அ) இங்கு பிரியாதான் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
   ஆ) பயந்த என்பதன் பொருள் யாது?

3. "ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்"
   அ) இங்கு வாதத்திற்கு வருமாறு அழைத்தவர் யார்?
   ஆ) இக் கூற்றின் ஊடாக வெளிப்படும் விடயம் யாது?

4. கன்னல் மொழி கேளாது கஞ்சமுகம் நோக்காது மன் நிலத்து வாழேன்.......
   அ) இவ்வடிகளில் தலைவனின் எத்தகைய மனநிலை உணர்த்தப்படுகிறது.
   ஆ) கஞ்சமுகம் என்பதன் பொருள் யாது?

5. "வளந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை நாவூறு வராமற் காரும் ஐயனாரே
   அ) இங்கு குறிப்பிடப்படும் கிராமிய நம்பிக்கை யாது?
   ஆ) இங்கு குறிப்பிடப்படும் காவல் தெய்வம் எது?

6. "எட்டுணையானும் இராவது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது"
   அ) இவ்வடி மூலம் உணர்த்தப்படும் விழுமியப்பண்பு யாது?
   ஆ) இப்பாடலடி இடம் பெறும் இலக்கியம் யாது?

7. "சீரெடுத்த புலையுர்ச் சாரர்கள் தேசபக்தர் வரவினைக் காத்தல் போல்"
   அ) இங்கு சாரர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
   ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?

8. "கொங்கர்க் கமராபதியளித்த கோவே"
   அ) இங்கு குறிப்பிடப்படும் மன்னன் யார்?
   ஆ) இக் கூற்றினைக் கூறிய புலவரைக் கூறுக.

9. "486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்".
   அ) உச்சாடனம் என்பதன் பொருள் யாது?
   ஆ) பரணி என்பது எவ்வகை இலக்கியத்திற்குள் அடங்குகிறது?

10. அ) இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?
    ஆ) இக் கட்டுரை எத்தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது?

(10× 2 = 20 புள்ளிகள்)

**(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i)

**பங்கப் பழனத் துழுமுழவர்**
**பலவின் கனியைப் பறித்ததென்று**
**சங்கிட்டெறி குரங்கிளநீர்**
**தனைக் கொண்டெறியும் தமிழ் நாடா**
**கொங்கர்க் கமரா பதியளித்த**
**கோவே ராசகுல திலகா**
**வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்**
**மெலிந்த பிறைக்கும் விழிவேலே**

*அ) சோழ நாட்டின் வளமும், குலோத்துங்க சோழனின் வீரமும் எவ்வாறு வெளிப் படுத்தப்படுகின்றது?*

*ஆ) வெங்கட்பிறை, கரும்பிறை, மெலிந்தப்பிறை என்பனவற்றின் பொருளை விளக்குக.*

(ii)

**செங்கமல வாள் விழியாட் சேர்க்கச் கருதுமுவன்**
**மங்கைதனக் கேற்ற மணவாளனோ புகல்வாய்**
**நங்கை நிலைக் கேற்க நடக்கவ வலனோ புவியிற்**
**கொங்குமலர் மாலை குரங்கிற் களிப்பாரோ**
**கோதையிட யிம்மாற்றம் கூறுதியாற் பைங்கிளியே**

*அ) தகுதியற்ற மணமகனை பெற்றோர் தமது பெண்ணுக்கு நிச்சயிப்பதை கவிஞர் எவ்வாறு கிண்டல் செய்கின்றார்?*

*ஆ) தூதனுப்பும் காதலன் காதலியை எவ்வாறு வர்ணிக்கின்றான்?*

(iii)

**சுடு மயானத்திடை தன் துணை ஏக**
**தோன்றல் துயர்க் கடலின் ஏக**
**கடுமை ஆர் கானகத்துக் கருணை ஆர் கலி**
**ஏக, கழல் கால் மாயன்**
**நெடுமையால் அன்று அளந்த உலகு எலாம்**
**தன் மனத்தே நினைந்து செய்யும்**
**கொடுமையால் அளந்தாளை, "ஆர் இவர்?**
**என்று உரை" என்ன குரிசில் கூறும்**

*அ) கைகேயியின் இரக்கமில்லாத கொடுமைத் தன்மை வெளிப்படுமாற்றை விளக்குக?*

*ஆ) கழல்கால் மாயன் சிறப்பு யாது?*

(iv) *இசை, நாடகம், நடனம் போன்றல்லாமல் சினிமா முழுக்க முழுக்க தொழில் நுணுக்க வளர்ச்சியின் படைப்பு காமிரா, லென்ஸ், ஒளிவிளக்குகள், ஒலிப்பதிவு நாடா, ஒளியெறிதல்* (Projection) *ஆகியவற்றின் உதவியால் தயாரிக்கப்படுவது ஆகவே சினிமாவைப் பற்றிப் பேசும் போது அதன் தனிப் பண்புகளை மனதில் வைத்தே பேச வேண்டும்.*

*அ) முழுக்க முழுக்க தொழில் நுணுக்க வளர்ச்சியின் படைப்பாக கருதப்படுவது யாது?*

*ஆ) அதில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப சாதனங்கள் இரண்டு தருக.*

(v) விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை, பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என் கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை, புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம்.

அ) இப்பந்தியில் புலப்படுத்தப்படும் மையக்கருத்து யாது?

ஆ) "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற தொடர் மூலம் உணர்த்தப்படுவது யாது?

*(5 × 4 = 20 புள்ளிகள்)*

(03) பாரதியார் சுயசரிதை என்ற பாடப்பகுதியில்

அ) பெண்மீது கொண்ட காதல்

ஆ) ஒருவர் விரும்பும் நலன்களை அடைவதற்கான வழிகள்

இ) விரும்பியவற்றை அடைய முடியாதவர்களின் இயல்புகள்.

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

அ) நாவலர் உடல் சோர்வுற்றிருந்த நிலை

ஆ) நாவலர் வீறுடன் எழுந்த வேகம், சபையில் ஏற்பட்ட மாற்றம்

ஆகியன வெளிப்படுமாற்றினை புலப்படுத்துக.

*(15 புள்ளிகள்)*

(04) மூத்தம்மா சிறுகதையில்

அ) கிராமத்து வாழ்க்கை முறை

ஆ) இயற்கை வர்ணனை

ஆகியன சித்திரிக்கப்படுமாற்றை எடுத்துரைக்க.

**அல்லது**

கிருஷ்ணன் தூதுச் சருக்கம் என்ற பாடப் பகுதியில்

அ) தருமன் போரைத் தவிர்ப்பதில் கொண்டிருந்த உறுதிப்பாடு

ஆ) வீமனின் வெஞ்சினம்

இ) அத்தினாபுரத்தின் சிறப்பு

என்பவற்றை விளக்குக.

*(15 புள்ளிகள்)*

☞ **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

(05) யானை அனையவர் ----------- (நாலடியார்)

அடக்கம் உடையார் ------------ (வாக்குண்டாம்)

ஆகிய நீதிப்பாடல்களில் நீதிக் கருத்துக்கள் வெளிப்படுமாற்றை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

(06) அற்றைத்திங்கள் நாடகத்தில் போருக்குப் பின்னரான புலம் பெயர்வின் துயரை அங்கவை, சங்கவைப் பாத்திரங்கள் எவ்வாறு வெளிப்படுத்தி நிற்கின்றன? *(10 புள்ளிகள்)*

(07) தமிழ்ப்பண்பாடு என்னும் கட்டுரையில்

அ) தமிழர்களின் உயர்ந்த குறிக்கோள்கள்

ஆ) பக்தி

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக?

The National e-learning Portal for The General Education